بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாய்ய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 5:10 ரஜப், 1430, பக்கங்கள்=12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A,Email : suvanam@gmail.com, www.suvanam.com

## நபிவழியில் நம் தொழுகை

- *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

தொழுகை இஸ்லாத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். அதனின் முக்கியத்துவம் பற்றி முந்திய இதழ்களில் தெரிந்து கொண்டோம். இந்த இதழில் நபிவழித் தொழுகையை தெரிந்து கொள்வோம். எந்த ஒரு அமலும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இரண்டு நிபந்தனைகள் அவசியமாகும். ஒன்று இக்லாஸ் (தூய எண்ணம்) இரண்டாவது நபிவழி. ஆகவே நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு தொழுதார்கள் என்பதை தெரிந்து நாமும் நமது தொழுகையை நிறைவேற்றுவோமாக!

நபிவழித் தொழுகை பற்றி கூறுவதற்கு முன், தொழுகையின் ஷர்த்துகள் (நிபந்தனைகள்) பர்ளுகள் (கடமைகள்) வாஜிபுகள் (அவசியமானவைகள்) பற்றி தெரிந்து கொள்வோம்.

தொழுகையின் நிபந்தனைகளுக்கு (ஷுரூத்துஸ் ஸலா) என்று அழைக்கப்படும்.

தொழுகையின் நிபந்தனைகளை முழுமைப்படுத்தாமல் தொழுகையை ஆரம்பிக்க முடியாது. அவைகள் பின்வருமாறு,

1. முஸ்லிமாக இருக்க வேண்டும் (தொழுபவர் முஸ்லிமாக இருக்க வேண்டும், முஸ்லிம் அல்லாதவர் தொழுதால் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)

2. புத்தியுள்ளவராக இருக்க வேண்டும். (பைத்திய காரர், மது அருந்திய நிலையில் போதையுடன் தொழுபவர், மயக்கம் ஏற்பட்டவர் போன்றவர்களின் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)

3. பிரித்தறியும் வயதுள்ளவராக இருக்க வேண்டும் (குழந்தை பிரித்தறியும் வயதை அடைந்திருக்க

*தொடர்ச்சி 5 ம் பக்கம் பார்க்க ...*

### உள்ளே!

அவரை மருத்துவம் - 3
மாபெரும் கட்டுரைப் போட்டி - 4
அலுவலகம் செல்லும் ... தவறுகள் - 5
இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் - 9
இறை நினைவுகள் - 12
அறிவுப் போட்டி - 12

## உலகப் பொருளாதார வீழ்ச்சியும் இஸ்லாமிய பொருளாதாரமும்

- *Mrs.ஷம்ஷாத்*

சத்தியமார்க்கம்.காம் நடத்திய 2008-2009 ஆண்டுக்கான சர்வதேச அளவிலான கட்டுரைப் போட்டியில் பெண்களுக்கான மூன்றாம் பரிசை வென்ற கட்டுரை.

சமீப காலமாக, 'பணவீக்கம், பொருளாதாரத் தேக்கம், பொருளாதார வீழ்ச்சி போன்ற சொற்கள் நம் காதுகளில் தினமும் விழும் சொற்களாகி விட்டன. தனிமனிதனிலிருந்து பெரும் அரசுகள் வரை பொருளாதார வீழ்ச்சியால் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. கீழே விழாமல் காலூன்றி நிற்க இடம் கிடைக்குமா என்ற தவிப்பில் நடுங்கிக் கொண்டிருக்கின்றன.

இவ்வருட ஆரம்பத்தில்கூட செழிப்பான தோற்றம் கொண்டிருந்தது பொருளாதாரம். பங்குகள் விலை ஏறிக்கொண்டே இருந்தன. அதைக் காட்டிலும் அதிகமாக அசையாச்சொத்துகளின் மதிப்புகளும் ஏறிக் கொண்டிருந்தன. சாதாரண வேலை செய்பவர்களுக்குக்கூட அதிக சம்பளம். எங்கும் செழிப்பு, சந்தோஷம். வர்ணஜாலம் காட்டிய நீர்க்குமிழி ஒரே நொடியில் உடைந்தது போல் இன்று உலகம் பொருளாதார நெருக்கடியால் திணறிக் கொண்டிருக்கிறது. பண வீக்கம் இரண்டு இலக்க எண்ணாகி பயமுறுத்துகிறது!

திடீரென்று பொருளாதாரம் வீழ்ச்சியடையக் காரணம் என்ன? செழிப்பு, வளர்ச்சி என்று நம் கண்களுக்குத் தெரிந்தது ஒரு மாயத்தோற்றம். இதைப் எளிமையாகப் புரிந்து கொள்ள வலைதளத்தில் சிக்கிய ஒரு குட்டிக் கதை.

ஒரு தீவு. அதில் புழக்கத்தில் இருந்தது இரண்டு ஒரு ரூபாய் நாணயங்கள் மட்டுமே. அதில் குடியிருப்போர் 3 பேர் - முருகன், அனில், மூர்த்தி.

முருகன், அனில் இருவரும் ஆளுக்கு ஒரு ரூபாய் வைத்திருந்தனர். ஆனால் மூர்த்தியிடம் பணம் இல்லை, ஒரு தென்னங்கன்று வளர்த்தான். முருகன் அதை ஒரு பணம் காய்ச்சி மரம் என்று நினைத்து மூர்த்திக்கு ஒரு ரூபாய் கொடுத்து அதை வாங்கினான். இப்போது தீவின் மதிப்பு 3 ரூபாய். அதாவது மூர்த்தி, அனில் இருவரிடமும் ஆளுக்கு ஒரு ரூபாயும் முருகனிடம் இருந்த மரத்தின் மதிப்பு ஒரு ரூபாயும் ஆகும். இதைக்கண்ட அனில் பணங்காய்ச்சி மரம் பிற்காலத்தில் உதவும் என்று மூர்த்தியிடம் ஒரு ரூபாய் கடன் வாங்கி தன் ஒரு ரூபாயையும் சேர்த்து இரண்டு ரூபாய்க்கு

மரத்தை வாங்கினான். இப்போது தீவின் மதிப்பு நான்கு ரூபாய். அதாவது மரம் 2 ரூபாய், முருகனிடம் 2 ரூபாய். மரத்தின் விலை ஏறிக்கொண்டே போவதைக் கண்ட மூர்த்தி, அதை விற்றதற்காக வருந்தி முருகனிடம் இருந்த 2 ரூபாயைக் கடனாக வாங்கி அனிலிடம் அவன் (அனில்) ஏற்கனவே பட்டிருந்த ஒரு ரூபாய் கடனையும் தள்ளுபடி செய்து மீண்டும் மரத்தை வாங்கினான். இப்போது மரத்தின் மதிப்பு 3 ரூபாய், அனிலிடம் 2 ரூபாய். தீவின் மதிப்பு 5 ரூபாய்.

அட மரத்தின் விலை கூடிக் கொண்டே போகிறதே என்று முருகன் அனிலிடம் 2 ரூபாய் கடன் வாங்கி, மூர்த்தியின் 2 ரூபாய் கடனை தள்ளுபடி செய்து 4 ரூபாய்க்கு மரத்தை கிரயம் செய்தான். இப்போது மூர்த்தியிடம் 2 ரூபாய். தீவின் மதிப்பு 4+2=6 ரூபாய்.

திடீரென்று அனிலுக்கு ஒரு கவலை. மரம் நினைத்தபடி பலன் தராவிட்டால் முருகன் தன் 2 ரூபாய் கடனை எப்படித் திருப்பித் தருவான்? மூர்த்திக்கும் அதே கவலை! அதனால் கையில் பணமிருந்தும் அவன் மரத்தை விலை பேச முன்வரவில்லை. என்னதான் சொன்னாலும் காய்க்காத மரத்தின் மதிப்பு ஒரு ரூபாய்தான் என்பதை புரிந்து கொண்டான் அவன். இப்போது மரத்தை வாங்க ஆளில்லை. மூர்த்தியிடம் 2 ரூபாய் இருக்கிறது. முருகனிடன் 4 ரூபாய் மதிப்புள்ள மரம் ஒரு ரூபாய் என மதிப்பிடப்படுகிறது. எனவே அவன் அனிலுக்குக் கொடுக்க வேண்டிய 2 ரூபாய் கடனில் ஒரு ரூபாய் மட்டுமே திருப்பித்தர முடியும்.

முருகன் திவாலாகிப் போனான். முருகன் பட்ட கடனை அனில் திரும்பாதக் கடனாகத் தள்ளுபடி செய்தான். 6 ரூபாயாக இருந்த தீவின் மதிப்பு இப்போது மீண்டும் 3 ரூபாய். இழந்த 3 ரூபாய் எங்கே போயிற்று?

### இக்கதையின் நீதி:

எளிமை கருதி வர்த்தகம் மூவருக்குள்ளே நடப்பதாக காட்டப்பட்டது. ஆங்கே இன்னுமொரு மரம் இருந்து ரத்தன் என்பவன் சொந்தக்காரனாக இருந்திருந்தால் இன்னும் ருசிகரமான கைமாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். ரத்தன் விளையாட்டில் சேராமல் வேடிக்கைப் பார்த்தாலும் அவனுடைய மரத்தின் விலையும் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கும். அதற்குத் தருந்தாற்போல் தீவின் மதிப்பு ஏறுவதும் இறங்குவதுமாக இருந்திருக்கும். இதைத் தவிர வெளித் தீவிலிருந்து யாரேனும் முதலீடு செய்ய முற்பட்டிருந்தால் பணப்புழக்கம் அதிகரித்து தீவின் மதிப்பும் காகிதத்தில் உயர்ந்து கொண்டே போகும். புத்திசாலியான வெளியாள் செயற்கையாக விலையை ஏற்றி, மரத்தை சமயம் பார்த்து உள்ளூர்க்காரனுக்கே அதிக விலையில் விற்று, தன் வங்கிக் கணக்குக்குப் பணத்தை மாற்றிக் கொண்டு போய் விடுவான். அப்போது தீவில் உள்ளவர்கள் ஏமாளிகளாக அமர்ந்திருக்க வேண்டியதுதான். பங்குச் சந்தை செய்கிற குளறுபடிகளும் இப்படிப்பட்டதே.

இப்படித்தான் உலகப் பொருளாதாரம் இன்று வீழ்ந்தது. வட்டி அடிப்படையில் கடன் சார்ந்த பொருளாதாரத்தில் என்றும் பொருளாதார உயர்வு இருக்காது. வளர்ச்சிபோல் காட்சியளித்து, நாளடைவில் நசிந்து விடும்.

"யார் வட்டி (வாங்கித்) தின்கிறார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டடப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் (வேறுவிதமாய்) எழ மாட்டார்கள். இதற்குக் காரணம் அவர்கள், 'நிச்சயமாக வியாபாரம் வட்டியைப் போன்றதே' என்று கூறியதினாலேயாம். அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி, வட்டியை ஹராமாக்கியிருக்கிறான். ஆயினும் யார் தன் இறைவனிடமிருந்து நற்போதனை வந்த பின் அதை விட்டும் விலகிவிடுகிறானோ, அவனுக்கு முன்னர் வாங்கியது உரித்தானது - என்றாலும் அவனுடைய விவகாரம் அல்லாஹ்விடம் இருக்கிறது. ஆனால் யார் (நற்போதனை பெற்ற பின்னர் இப்பாவத்தின் பால் மீண்டும்) திரும்புகிறார்களோ அவர்கள் நரகவாசிகள் ஆவார்கள். அவர்கள் அதில் என்றென்றும் தங்கிவிடுவார்கள்" (2:275).

அமெரிக்க முதலாளித்துவத்தின் சீர்கேட்டால் இன்று உலகமே பொருளாதார நெருக்கடியில் உள்ளது. பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறார்கள். இது தொழிலகங்களையும் பாதித்து அதனால் ஆயிரக்கணக்கானவர்கள் வேலையிழப்பார்கள். இது ஒரு சங்கிலித் தொடர்போல் எல்லாத் தரப்பினரையும் பாதிக்கும்.

முதலாளித்துவத்துவத்தின் நிலை இப்படி என்றால், ரஷ்யா, சீனா போன்ற சமவுடமை நாடுகள் நிலை என்ன? அவை தங்கள் மத்திய திட்டமிடல் பொருளாதாரத்தைக் கைவிட்டு முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு மாறும் செயற்பாட்டில் இறங்கியிருக்கின்றன. காரணம் சமவுடமையிலும் வெற்றி இல்லை.

சரி, இப்படி மனிதனால் ஏற்படுத்தப் பட்ட பொருளாதாரக் கொள்கைகள் வீழ்ச்சியடையும்போது படைத்தவனின் வழிகாட்டல் என்ன என்று பார்ப்போம்!

எப்படி வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம், எப்படி வேண்டுமானாலும் செலவழிக்கலாம், முதலீடு செய்யலாம் என்பதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. வழிபாடு, வாழ்வியல், அரசியல், சமூகவியலில் மட்டுமல்லாமல் பொருளாதாரத்திலும் சட்ட-திட்டங்களை வகுத்துள்ளான் வல்ல இறைவன். இஸ்லாமிய வரையறைகளுக்கு உட்பட்ட பொருளாதாரக் கொள்கைகளை ஒரு நாடு பின்பற்றினால் தனிமனித வறுமையை ஒழிக்க முடியும். மைக்கல் ஹார்ட் என்பவர் இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார், "... சிலர் நினைப்பதுபோல் நபி (ஸல்) அவர்களுடைய சாதனைகள் தற்காலிகமானவை அல்ல. திருக்குர் ஆனின் நிரந்தரமான நெறிகளின் அடிப்படையில் அமைந்தவை. மனித சரித்திரத்தில் அவர் ஒரு பெரும்புரட்சியை ஏற்படுத்தினார் - பொருளாதாரம் மற்றும் அரசியலில் கூட! - Michael Hart (THE 100, pages 3-10).

நபி (ஸல்) அவர்கள் மதினாவிற்குச் சென்ற சில காலத்திலேயே மக்களின் நிதி நிலைமையில் முன்னேற்றம்! உமர் (ரலி) அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த காலகட்டத்தில் இஸ்லாமியப் பொருளாதார கொள்கைகள் உச்சகட்டத்தை அடைந்தது என்றும் மைக்கல் ஹார்ட் குறிப்பிடுகிறார் - Michael Hart (THE 100, pages 261-265).

## இஸ்லாமியப் பொருளாதாரம்

நபி (ஸல்) அவர்களும், நேர்வழி பெற்ற நான்கு கலீஃபாக்களின் ஆட்சியிலும் பின்பற்றப்பட்ட, நாமும் பின்பற்ற வேண்டிய பொருளாதாரக் கொள்கையைப் பார்ப்போம். இஸ்லாமிய அரசின் அடிப்படை வருமானம் ஸகாத், கனிமத், ஜிஸ்யா, மற்றும் ஃகராஜ் இவையே.

ஸகாத் என்ற சொல்லின் நேரடிப் பொருள் வளர்ச்சி மற்றும் தூய்மை என்பதாகும். ஸகாத் வழங்குவது இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்று. அதனால் இது இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு (நிஸாபுக்கு) மேல் தங்கம், வெள்ளி, ரொக்கப்பணம், அசையும் அல்லது அசையாச்சொத்து வைத்திருக்கும் முஸ்லிமுக்குக் கட்டாயக் கடமையாகிறது. இவற்றின் மொத்த மதிப்பில் இரண்டரை சதவீதம் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்பதும் நபிமொழிகளின் மூலம் தெரிகின்றன. இப்படி வழங்கப்படும் ஸகாத், பொது நிதியில் (பைத்துல் மால்) சேர்க்கப்பட்டு, எட்டு வகையினருக்குப் பங்கிடப் படுகிறது. இதன் மூலம் செல்வம் சிலரிடம் மட்டும் தேங்கிக் கிடக்காமல், ஏழைகளுக்கும் பங்கிடப்படுவதால் வறுமை ஒழிப்பில் ஸகாத் ஒரு பெரும்பங்கு வகிக்கிறது. இதனால் ஸகாத் கொடுப்பவருக்கு என்ன லாபம் என்றால், அவருடைய பொருள் தூய்மையடைவதுடன், இம்மையிலும் மறுமையிலும் நன்மை வளர்ச்சியும் அடைகிறது.

கனிமத் என்பது போரில் கிடைக்கும் செல்வம். இதில் ஐந்தில் ஒரு பங்கு பொது நிதியில் சேர்க்கப்படுகிறது.

ஜிஸ்யா என்பது இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் முஸ்லிம் அல்லாதவர்கள் செலுத்த வேண்டிய வரி. பெண்கள், வாலிப வயதை எட்டாத ஆண்பிள்ளைகள், முதியோர் ஆகியோரின் மீது ஜிஸ்யா கடமையல்ல. முஸ்லிம்களுக்கு ராணுவப்பணி கட்டாயமானதாக இருந்தது. ஆனால் முஸ்லிமல்லாதவர்களுக்கு ராணுவப்பணி கட்டாயமானதல்ல. அவர்கள் செலுத்தும் வரியும் முஸ்லிம்கள் செலுத்த வேண்டிய ஸகாத்தை விட மிகக் குறைந்த அளவே நிர்ணயிக்கப்பட்டது. இருப்பினும் அவர்கள் இஸ்லாமிய அரசின் முழுப்பாதுகாப்பையும் பெற்றவர்களாக இருப்பார்கள்.

கரஜ் என்பது இஸ்லாமிய நாட்டினால் கைப்பற்றப்பட்ட நாடுகள் செலுத்த வேண்டிய வருடாந்திர வரி (கப்பம்).

மேற்கண்ட விதத்தில் கிடைக்கும் வருமானம் அரசுக் கருவூலத்தில் சேர்க்கப்படும். அதன் பெயர் பைத்துல் மால் என்பதாகும். நபி (ஸல்) அவர்கள் காலத்திற்குப் பின் ஆண்ட நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் ஆட்சிகளில் பைத்துல் மால் பொருளாதாரத்தில் பெரும்பங்கு வகித்தது. இந்தப் பொதுநிதியிலிருக்கும் செல்வம் ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் தர்ம ஸ்தாபனங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டன. இதனால் நாளடைவில் ஏழைகள் மிகுந்திருந்த அரபுத் தீபகற்பத்தில் ஏழைகளே இல்லாத அளவிற்குச் செழிப்பு ஏற்பட்டது. இது மந்திரமோ மாயமோ அல்ல. ஈமானும் இறையச்சமும் கொண்ட செல்வந்தர்கள், ஸகாத்தைச் சரியாகக் கணக்கிட்டு உரிய காலத்தில் பைத்துல் மாலில் சேர்ப்பித்ததுடன், இறையருளை நாடி தாராளமாக அதிகப்படியான விருப்ப தர்மமான ஸதகாவையும் அளித்தார்கள். அது மட்டுமல்லாமல் பைத்துல் மாலின் பொறுப்பாளர்கள் இறையச்சத்துடன் அச்செல்வத்தை அமானிதம் என உணர்ந்து கவனமாகக் கையாண்டார்கள். இதனால் இஸ்லாமிய நாடுகளின் செழிப்பும் வாழ்க்கைத் தரமும் வியக்கத்தக்க அளவில் உயர்ந்தன. அது மட்டுமல்ல இந்தப் பொதுநிதி, பள்ளிவாயில்கள், கல்விச்சாலைகள், மருத்துவமனைகள், அநாதை இல்லங்கள் போன்றவற்றை நடத்தவும் உதவியாக இருந்தது.

இப்படிப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளால் இருப்பவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் இடையே இருந்த இடைவெளி குறைந்தது. செல்வம் ஒரே இடத்தில் தேங்கிக் கிடப்பது தவிர்க்கப்பட்டது. இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கை முதலாளித்துவத்திற்கும் பொதுவுடைமைக்கும் இடைப்பட்டது. இவ்விருகொள்கைகளிலும் உள்ள குறைகளை விடுத்து நன்மைகளை மாத்திரம் நடைமுறைச் சாத்தியமாக்கியது.

நேற்று மட்டும் அல்ல இன்றும் என்றும் வெற்றி தரக் கூடியது இஸ்லாமியப் பொருளாதாரமே! இது ஏட்டில் படிப்பதைக் காட்டிலும் செயல்முறைப் படுத்தும்போது அதன் மூலம் எல்லாத்தரப்பினரும் பயனடையலாம்.

நன்றி: www.satyamargam.com

## அவரை மருத்துவம்

- கொடிக்காய்களில் சிறந்தது அவரைக்காய்.
- மலிவான விலையில் நிறைய ஊட்டச்சத்தினைத்தருவது அவரை.
- புரதம், சுண்ணாம்புச்சத்து, இரும்பு, வைட்டமின் சத்துக்கள் இதில் ஒருங்கே உள்ளன.
- மிக எளிதில் செரிமானமாகக் கூடியது அவரை. பலவீனமான குடல் உடையவர்களுக்கு, இரவு நேரத்திலும், பத்திய உணவாகவும் இது உண்பதற்கு ஏற்றது.
- முற்றிய அவரைக் காயை விட அவரைப் பிஞ்சே நல்லது.
- வெண்ணிற அவரைக்காய் வாயு, பித்தம் இவற்றைக் கட்டுப்படுத்தும், உள்ளுறுப்புகளின் அழற்சியைப் போக்கும்;, எரிச்சலை அடக்கும்.
- நீரிழிவு நோய், பேதித்தொல்லை, அடிக்கடி தலைவலி வருதல், ஜீரணக் கோளாறு, சீதபேதி, இவற்றிற்கு அவரையை அடிக்கடி உணவில் சேர்த்தால் பலனுண்டு.
- அஸ்ஸாமில் (இந்தியா) காது வலிக்கும், தொண்டை வலிக்கும் அவரைக்காயின் சாறைப் பயன்படுத்துகின்றனர்.
- இரத்தக் கொதிப்பைத் தடுக்கும் ஆற்றல் இதற்குண்டு என்பது அண்மைய கண்டுபிடிப்பு.
- அவரையைப் பற்றிய பழைய வைத்திய நூல்குறிப்பு: 'கங்குல் உணவிற்கும் கறிக்கும் முறைக்கும் பொங்குதிரி தோடதோர் புண்கரத்தோர். தங்களுக்கும் கண்முதிரைப் பில்லநோய்க்காருக்குய் காழுறையா வெண்முதிரைப் பிஞ்சாம் விதி'

# சுவனப்பாதை மாத இதழ் நடத்தும் உலகளாவிய மாபெரும் எழுத்துலகப் புரட்சிப் போட்டி
## ஸனாயிய்யா - ஜித்தா, சவூதி அரேபியா

## பரிசு விபரங்கள்

### SR 1500க்கு மதிப்புள்ள முதல் மூன்று பரிசுகள்.

### பத்துக்கும் மேற்பட்ட ஆறுதல் பரிசுகள்.

**விதிமுறைகள்**

1. கட்டுரைகள் 3 முதல் 6 பக்கத்திற்குள் மிகாமல் இருக்க வேண்டும், தட்டச்சு செய்திருந்தால் 1200-1500 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்கவேண்டும்

2. தட்டச்சு (Typing) செய்யப்பட்ட கட்டுரையின், எழுத்துருவும் (F o n t) ஈமெயில் மூலமாகவோ, நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

3. கட்டுரையை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்பிக்க விரும்புபவர்கள் மூடிய உறையிலிட்டு, முழுமையான முகவரி மற்றும் தொலைப்பேசி எண்ணுடன் அனுப்ப வேண்டும்

4. பிற கட்டுரைகளிலிருந்து தொகுக்காமல், சொந்தமான ஆக்கங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும், புரட்சிகரமான கருத்துகள், புதுமை ஆக்கங்கள், ஆகியவை மார்க்கத்திற்கு முரண் இல்லாமல், ஆதாரங்களின் அடிப்படையில் மதிப்பெண்கள் அளிக்கப்படும, கட்டுரைகள் திருப்பி கொடுக்கப்பட மாட்டாது.

5. கட்டுரைகளை சமர்ப்பிக்கவேண்டிய முகவரி/ இடங்கள்:

a. இஸ்லாமிய அழைப்பகம் - ஸனாய்யியா.

b. துறைமுக நூலகம் - துறைமுகம்

c. suvanam@gmail.com

d. P.O. Box No. 32628, Jeddah 21438, Saudi Arabia.

6. கட்டுரைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: பிறை 30 ஷஃபான் 1430 (ஆகஸ்ட் 21, 2009).

7. பரிசளிப்பு நாள் பின்பு அறிவிக்கப்படும்.

8. தமிழில் எழுத தெரிந்த அனைவரும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்

9. சிறந்த கட்டுரைகள் சுவனப்பாதை மாத இதழில் வெளியிடப்படும். (மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் செய்ய ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு).

10. சுவனப்பாதை பத்திரிக்கை குழுவினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்கள் இப்போட்டியில் கண்டிப்பாக கலந்துகொள்ள அனுமதி இல்லை

11. ஒருவர் பல தலைப்புகளில் கட்டுரை சமர்பிக்கலாம்

12. ஒரே தலைப்பில் பலர் கட்டுரை எழுதியிருந்தால் அதிகபட்ச மதிப்பெண்கள் பெற்ற கட்டுரை மட்டுமே சுவனப்பாதையில் பிரசுரிக்கப்படும்.

13. ஒரே தலைப்பில் பலர் கட்டுரைகள் எழுதி முதல் மூன்று பரிசுக்களுக்கோ, அல்லது ஆறுதல் பரிசுக்களுக்கோ மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

14. பலர் ஒரே மதிப்பெண்கள் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

15. ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

**தலைப்புகள்:**

1. நபி(ஸல்) உலகத்திற்கோர் முன்மாதிரி
2. நீங்கள் ஒரு நல்ல மனைவியா?
3. தனிக்குடித்தனம் தரமானதா?
4. கருப்பை சுதந்திரம் பெண்ணுரிமையா?
5. இரண்டாம் திருமணத்தை பெண்கள் எதிர்ப்பதேன்?
6. விவாகரத்து ஒரு கழுகுப்பார்வை
7. தஃவாவில் பெண்களின் பங்கு
8. பெண்களும் உடற்பயிற்சியும்
9. அழகு சாதனப் பொருட்கள் - ஓர் ஆய்வு
10. கொடுப்பதும் எடுப்பதும் (மஹர், வரதட்சணை)
11. பத்திரிக்கை தர்மம்
12. பிரிவுகளுக்கு மத்தியில் அழைப்புப்பணி
13. இணையத்தில் இஸ்லாம் (சாதகங்களும் பாதகங்களும்)
14. கல்வியில் கணினியின் பங்கு
15. செல்ஃபோன் சிந்தனைகள்
16. மல்ட்டி லெவல் மார்க்கெட்டிங் - ஓர் ஆய்வு
17. தவணைமுறை வியாபாரங்கள் - ஓர் ஆய்வு
18. முதல் உதவி மருத்துவங்கள்
19. மருத்துவமும் மனோதத்துவமும்
20. அறிவியல் சாதனைகளில் முஸ்லிம்கள்
21. இறைவனின் அருட்கொடை - ஃபைபாஸ் சர்ஜரி
22. டென்ஷன் ஆவது ஏன்?
23. அழைப்புப்பணியில் புதிய தொழில்நுட்பங்களின் பங்கு
24. முஸ்லிம்களின் நவீன எழுச்சியும் வீழ்ச்சியும்
25. தனிமனித வழிபாடு - ஓர் ஆய்வு
26. கற்காலத்தை நோக்கி மனிதன்
27. வெளிநாட்டு வாழ்க்கை (சாதகமும் பாதகமும்)

28. ஷியாயிசம் ஓர் ஆய்வு

29. ஈராக் - ஒரு வரலாற்றுப் பார்வை

30. சவுதி அரேபியா - ஒரு வரலாற்றுப் பார்வை

31. இலங்கையில் இஸ்லாம் (வரலாற்றுப் பார்வை)

32. கிரிக்கெட்

33. ஷேர் மார்க்கெட்

34. வியாபாரமும் வட்டியும்

35. அரசியலும் நபி(ஸல்) அவர்களும்

36. குடும்பவியலும் நபி(ஸல்) அவர்களும்

37. புறம், கோள் மற்றும் அவதூறு

38. தர்ஹா வழிபாடு மார்க்கமா? – ஓர் ஆய்வு

39. வீரமும் உமர் (ரலி) அவர்களும்

40. பொறுமையும் அபூபக்ர் (ரலி) அவர்களும்

41. உழைத்து உண்ணுதல்

42. அரசாங்க உயர் பதவிகளில் தமிழக முஸ்லிம்கள் இடம்பெறாதது ஏன்? தீர்வு என்ன?

43. அரசிடமிருந்து நமக்குள்ள முழு உரிமையையும் பெற்றுக்கொள்ள வலுவான ஒரே தலைமையின் கீழ் எல்லா முஸ்லிமகளும் அணிதிரள வழி என்ன?

44. பெரும்பாலான தமிழக முஸ்லிம்கள் வெளிநாட்டு வாழ்க்கையை தேர்ந்தெடுப்பதேன்?

45. அரசியலில் முஸ்லிம்கள் ஓரங்கட்டப்படுவதேன்?

46. நபி (ஸல்) அவர்களின் இறுதிப்பேருரை

47. குர்ஆன் இறக்கப்பட்டதின் நோக்கம்?

48. மாற்று மதத்தாருக்கு நாம் அளிக்கும் பங்களிப்பு

49. பொறுமையின் அவசியம்

50. நட்பு

# அலுவலகம் செல்லும் நம் மக்கள் செய்யும் ஐந்து முக்கிய தவறுகள்

### 1. காலை உணவைத் தவிர்த்தல்

காலையில் எழுந்து அவசரமாக கிளம்பி ஒரு காபி அல்லது டீ மட்டும் குடித்துவிட்டு செல்பவரா நீங்கள்? அலுவலகத்தில் எரிச்சல், கடுப்பு, சரியாக வேலை செய்யமுடியாமைதான் ஏற்படும்.

இதற்கெல்லாம் என்ன காரணம்? உடலில் போதிய அளவு சக்தியின்மைதான். ஆங்கிலத்தில் பிரேக்ஃபாஸ்ட் என்றால் பிரேக்கிங் தி ஃபாஸ்டிங் என்பார்கள். அதாவது இரவு முழுக்க விரதம் இருந்து காலையில் விரதம் முடிப்பது போல்! காலையிலேயே உடலில் உண்ணாததால் சக்தி இருக்காது! மதியம் வருவதற்குள் மயக்கம் வந்து விடும். என்ன செய்வீங்க? மதியம் கொஞ்சம் சேர்த்து சாப்பிடுவீங்க. அதனால் என்ன ஆகுமென்றால் உடலில் சர்க்கரை அளவு கூடி விடும். இதனாலும் அசதி, தூக்கம்தான் வரும்.

என்ன செய்ய வேண்டும்: 1 கப் பால், கொஞ்சம் கார்ன் ஃப்ளேக்ஸ் போல, ஒரு பழம் போதும். (தேவையென்றால் ஒரு முட்டை) என்று காலை உணவை முடிங்க!!

### 2. காபி, டீ

அளவுக்கு அதிகமா காபி, டீ சாப்பிடுவது. இது தொடர்ந்து குடிப்பவர்களுக்கு விடுவது பெரிய சிரமமாக இருக்கும். காபி, டீ தொடர்ந்து குடிப்பவர்களுக்கு எரிச்சல், சக்தியின்மை ஏற்படும். இரவில் தூக்கம் கூட மாறி மறுநாள் சுறுசுறுப்பு இருக்காது. சாப்பாடுடன் சேர்த்து சாப்பிட்டால் காபி இரும்புச்சத்தை உடலில் சேரவிடாது. அதனால் சத்துக்குறைவு ஏற்படும்.

என்ன செய்யலாம்: அடிக்கடி குடிப்பதை விடமுடியவில்லையா? கொஞ்சமாக குடியுங்கள்!

### 3. தண்ணீர்.

நிறைய அலுவலகங்கள் குளிர்சாதன வசதியுடன் இருப்பதால் நமக்கு தாகம் அதிகம் எடுக்காது. இதனால் தண்ணீர் குடிப்பது குறைந்துவிடும். உடலும் அதற்கேற்ப மாறிவிடும். இதனால் சில வருடங்களில் மலச்சிக்கல், சரியாக செரிக்காமல் போவது, வாயுத்தொல்லை. தண்ணீர் உடலில் குறைதல், தோல் மினுமினுப்பு குறைதல் ஆகியவை ஏற்படும்.

என்ன செய்யவேண்டும்: அலுவலக மேஜையில் ஒரு லிட்டர் தண்ணீர் பாட்டில் வைத்துக்கொள்ளவும்.

அலுவலகம் முடிவதற்குள் ஒரு லிட்டரை முடித்துவிட வேண்டும். எவ்வளவு சுலபம் பாருங்க.

### 4. ரொம்ப பிஸியா?

மீட்டிங் மத்தியான நேரத்திலா? உங்களால் மதிய உணவு சாப்பிட முடியவில்லையா! சரியான ஒரு நேரத்தை அதாவது 12.30 – 2.00 க்குள் தேர்ந்தெடுத்து அந்த நேரத்தில் தினமும் சாப்பிட்டு விடுங்கள். இது அல்சர், வாயுத்தொல்லை ஆகியவற்றிலிருந்து உங்களைக்காப்பாற்றும். இது மேலும் அதிக உணவு உண்ணுதல், எடை அதிகரிப்பு ஆகியவற்றையும் தடுக்கும்.

### 5. வார இறுதி. –

இந்த வார இறுதின்னாலே மக்களுக்கு குஷிதான்!! வாரம் முழுக்க கடின வேலை!! வார இறுதியில் கொண்டாட்டம்!! கெண்டகி சிக்கன் என்று அள்ளி விளையாடுகிறீர்களா? கொஞ்சம் பொறுமை!! இந்த காம்பினேஷனெல்லாம் நீண்ட உடல் நலத்துக்கு உதவாது. கொஞ்சம் அடக்கி வாசிங்க!!

என்ன செய்யலாம்: ஒவ்வொரு நாளுமே கொஞ்சம் வேலை முடிந்தவுடன் ரிலாக்ஸ் பண்ணவும். சின்ன மசாஜ், விளையாட்டு, புத்தகம் என்று வார இறுதியை விட ஒவ்வொரு நாளும் ரிலாக்ஸ் பண்ணிவிடுங்க!! அப்புறம் என்ன ஜாலிதானே!!

☆ ☆ ☆

*நபி வழியில் ... முதல் பக்கத் தொடர்ச்சி ...*

வேண்டும்)

4. சிறு தொடக்கு பெருந்தொடக்கிலிருந்து சுத்தமாக இருக்க வேண்டும். (சிறு தொடக்கு என்பது உளூ இல்லாததை குறிக்கும், உளூ முறிந்தால் உளூ செய்யாமல் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)

### உளூவை முறிக்கும் காரியங்கள்

1. முன் பின் துவாரத்தினால் ஏதாவது வெளியாகுதல் – அதாவது மலம், ஜலம், காற்று, மணி, மதி, வதி இவைகள் வெளியாகுவது. மலம், ஜலம் வெளியானால் உளூ செய்ய வேண்டும் என்பதற்கு ஆதாரம்.

நீங்கள் குளிக்கக் கடமைப்பட்டோராக இருந்தால் குளித்துப் பரிசுத்தமாகிக் கொள்ளுங்கள், இன்னும் நீங்கள் நோயாளிகளாகவோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால், அல்லது உங்களில் எவரும் மலஜலம் கழிக்கச் சென்று வந்திருந்தாலும், அல்லது நீங்கள் பெண்களை (உடலுறவின் மூலமும்) தீண்டியிருந்தாலும் அப்பொழுது (சுத்தம் செய்து கொள்ள) தண்ணீரை நீங்கள் பெறாவிடில் பரிசுத்தமான மண்ணை நாடுங்கள், பின்னர் அதிலிருந்து உங்களுடைய முகங்களையும், உங்களது கைகளையும் தடவி (தயம்மும் செய்து)க் கொள்ளுங்கள். (5:6)

உங்களில் ஒருவர் சிறு தொடக்காகி விட்டால் அவர் உளூ செய்யும் வரைக்கும் அல்லாஹ் அவரின் தொழுகையை ஏற்றுக் கொள்ளமாட்டான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் - புகாரி, முஸ்லிம்)

பின் துவாரத்தினால் காற்று வெளியானால் உளூ முறியும் என்பதற்கு ஆதாரம்.

உங்களில் ஒருவர் சிறு தொடக்காகி விட்டால் அவர் உளூ செய்யும் வரைக்கும் அல்லாஹ் அவரின் தொழுகையை ஏற்றுக் கொள்ளமாட்டான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் - புகாரி, முஸ்லிம்)

உங்கள் ஒருவரின் வயிற்றில் குழப்பம் ஏற்பட்டு வயிற்றிலிருந்து ஏதாவது வெளியானதா? இல்லையா? என சந்தேகித்தால் (வயிற்றிலிருந்து வெளியாகிய காற்றின்) சத்தத்தை கேட்காமலோ அல்லது வாடையை நுகராமலோ பள்ளியை விட்டும் வெளியாக வேண்டாம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

மணி என்பது:- இந்திரியம், இது ஆசையோடு வெளியானால் குளிப்பு கடமையாகும், உளூவும் முறிந்துவிடும். ஆசையில்லாமல் நோயின் காரணத்தினால் வெளியானால் குளிப்பு கடமையாகாது உளூ செய்வது அவசியம்.

வதி என்பது:- சிறுநீர் கழித்த பின் வெளியாகும் கனமான வெள்ளை நிறமுள்ள நீர், இது அசுத்தமான நீர், இந்நீர் படும் இடத்தை கழுவ வேண்டும். வதி வெளியாவதினால் ஆண் உறுப்பையும் அதன் பகுதியையும் கழுவிக்கொண்டு தொழுகைக்கு உளூ செய்வதைப்போல் உளூ செய்ய வேண்டும் என இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் - பைஹகி)

மதி என்பது:- காம உணர்வுகள் ஏற்படும் போது, கணவன் மனைவி உறவின் போது வெளியாகும் வழுவழுப்பான நீர், இந்த நீர் வெளியாகும் போது சில நேரம் மனிதன் அதை உணராமல் இருக்கலாம், இதுவும் அசுத்தமான நீர்தான், இந்நீர் படும் இடத்தையும் கழுவ வேண்டும்.

நான் அதிகம் மதி வெளியாகும் மனிதனாக இருந்தேன், நபி (ஸல்) அவர்களின் மகளை நான் திருமணம் முடித்திருந்த காரணத்தினால் நபி (ஸல்) அவர்களிடம் இதைப்பற்றி கேட்க வெட்கப்பட்டேன், இதனால் இன்னும் ஒருவரிடம் அதைப்பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்கும் படி கூறினேன், அவர் நபி (ஸல்) அவர்களிடம் (அதைப்பற்றி) கேட்டார், உளூ செய்து உமது ஆண் உறுப்பை கழுவிக் கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் விடையளித்தார்கள் என அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் - புகாரி)

2. ஆழ்ந்த தூக்கம் - நபித்தோழர்கள் இஷாத் தொழுகையை எதிர்பார்த்தவர்களாக தங்களின் தலை சாயும் அளவுக்கு தூங்கிக்கொண்டிருப்பார்கள், பின்பு உளூ செய்யாமலே தொழவும் செய்வார்கள். (ஆதாரம் - முஸ்லிம்)

ஆழ்ந்த நிலையில் தூங்காமல் உட்கார்ந்து கொண்டு தூங்குவதினால் உளூ முறியாது, சாய்ந்த நிலையில் ஆழ்ந்து தூங்கினால் உளூ முறிந்து விடும்.

3. புத்தி நீங்குவது – அதாவது பைத்தியம், மயக்கம், போதை போன்ற காரணங்களால் புத்தி நீங்குவதினால் உளூ முறியும்.

4. அபத்தை திரையின்றி இச்சையின் காரணமாக தொட்டால் - தன் ஆண் உறுப்பை யார் தொடுகின்றாரோ அவர் உளூ செய்யாமல் தொழக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் - திர்மதி)

ஒரு ஆண் தன் அபத்தை தொடுவதினால் அவருடைய உளூ முறிந்து விடுமா? என ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார், அது அவருடைய உடம்பிலுள்ள மற்ற உறுப்புகளைப் போன்ற ஒரு உறுப்புத்தான், அதனால் அவருடைய உளூ முறியாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் - அபூதாவூத், திர்மிதி)

இந்த இரண்டு ஹதீதையும் பார்க்கும் போது ஒரு ஹதீதில் அபத்தை தொடுவதினால் உளூ முறியும் என்றும், மற்ற ஹதீதில் உளூ முறியாது என்றும் வந்திருப்பதை பார்த்தீர்கள், இப்படி ஒன்றுக்கொன்று முரன்படக்கூடிய ஹதீதுகள் வரக்கூடிய நேரங்களில் இரு ஹதீதுகளும் ஆதாரப்பூர்வமான ஹதீதுகளாக இருந்தால் இரு ஹதீதுகளையும் இணைத்து அமல் செய்ய வேண்டும், இங்கே வந்திருக்கும் இரு ஹதீதுகளும் ஆதாரப்பூர்வமான ஹதீதுதான். ஆகவே இவ்விரு ஹதீதுகளையும் இணைத்து அமல் செய்ய வேண்டும். அதாவது அபத்தை தொடுவதினால் உளூ முறியும் என்று சொல்லக்கூடிய ஹதீதுக்கு இச்சையோடு தொடும்போது என்றும், அபத்தை தொடுவதினால் உளூ முறியாது என்று வரக்கூடிய ஹதீதுக்கு இச்சையில்லாமல் தெரியாமல் படும்போது என்றும் விளங்கிக் கொண்டால் இரண்டு ஹதீதையும் அமல் செய்ததாக ஆகிவிடும், குழப்பம் ஏதும் இல்லை. அல்லாஹ் மிகவும் நன்கறிந்தவன்.

5. ஒட்டக இறைச்சி சாப்பிடுவது - ஆட்டிறைச்சி சாப்பிட்டால் நாங்கள் உளூ செய்ய வேண்டுமா? என

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார், நீங்கள் விரும்பினால் உளூ செய்து கொள்ளுங்கள், நீங்கள் விரும்பினால் உளூ செய்ய தேவையில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ஒட்டகை இறைச்சி சாப்பிட்டால் உளூ செய்ய வேண்டுமா? என அம்மனிதர் கேட்டார், ஆம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் - அஹ்மத், அபூதாவூத்)

குறிப்பு :- அன்னிய பெண்ணின் உடலில் படுதலினால் உளூ முறியாது

நபி (ஸல்) அவர்கள் நோன்பாளியாக இருக்கும் போது ஆயிஷா (ரலி) அவர்களை முத்தமிட்டார்கள், முத்தமிடுவதினால் நோன்பும் முறியாது, உளூவும் முறியாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (முஸ்னதுல் பஸ்ஸார்)

நபி (ஸல்) அவர்கள், அவர்களின் சில மனைவியரை முத்தமிட்டுவிட்டு உளூ செய்யாமலேயே தொழச் சென்றார்கள். (அஹ்மத், திர்மிதி)

நபி (ஸல்) அவர்கள் தொழும் பக்கம் நான் தூங்கிக் கொண்டிருப்பேன், அவர்கள் சுஜூது செய்ய நாடினால் என் காலை சுரண்டுவார்கள் நான் என் காலை மடக்கிக் கொள்வேன் என ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புகாரி, முஸ்லிம்)

ஒரு இரவு நபி (ஸல்) அவர்களை அவர்களின் படுக்கை விருப்பில் நான் காணவில்லை. அவர்களை நான் தேடினேன் (அவர்கள் பள்ளியில் சுஜூது செய்து கொண்டிருந்ததினால்) அவர்களின் இரு கால் பாதங்களும் நாட்டப்பட்ட நிலையில் இருந்தது. அவர்களின் இரு கால் பாதங்களில் என் கை பட்டது என ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (முஸ்லிம்)

இதே போல் சூரத்துல் மாயிதாவின் ஆறாவது ஆயத்தில் பெண்ணைத் தொட்டு தண்ணீர் இல்லையென்றால் தயம்மும் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆயத்தின் கருத்து, பெண்ணோடு உடலுறவு கொண்டு தண்ணீர் இல்லையென்றால் தயம்மும் செய்து கொள்ளுங்கள் என்பதாகும், இங்கே தொட்டால் என்பதின் கருத்து உடலுறவு என்பதுதான், வெறும் தொடுதல் என்பதல்ல. பெண்ணை தொட்டால் உளூ முறியாது என்பதினால் அன்னிய பெண்ணை தொடலாம் என்பதல்ல. தெரியாமல் ஒரு அன்னிய பெண்ணின் உடம்பிலோ அல்லது மஹ்ரமான பெண்ணின் உடம்பிலோ ஒரு ஆணின் உடல் பட்டுவிட்டால் உளூ முறியாது என்பதே சரியானதாகும். அல்லாஹ் மிகவும் நன்கறிந்தவன்.

பெருந் தொடக்கு ஏற்பட்டவர் குளிக்காமல் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பெருந் தொடக்கு ஏற்படுவதற்குரிய காரணங்கள்.

### 1. தூக்கத்திலோ அல்லது விழிப்பிலோ இன்ப உணர்வோடு இந்திரியம் வெளியாகுதல்.

தண்ணீரைக் கொண்டு தண்ணீர் (இந்திரியம் வெளியானால் குளிப்பு கடமையாகும்) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

உம்மு ஸுலைம் என்னும் ஸஹாபிப் பெண்மணி ஒருவர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உண்மையைக்கூறும் விஷயத்தில் அல்லாஹ் வெட்கப்படுவதில்லை ஒரு பெண்ணுக்கு இந்திரியம் வெளியாகிவிட்டால் அப்பெண் குளிப்பது கடமையா? என கேட்டார்கள். இந்திரியம் வெளியானதை ஒரு பெண் உணர்ந்தால் அப்பெண்ணுக்குக் குளிப்பு கடமையாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

இங்கே சில செய்திகளை குறிப்பிடுவது பிரயோஜனமாகும்

இன்ப உணர்வின்றி சாதாரண நிலையில் இந்திரியம் வெளியானால் குளிப்பு கடமையாகாது, காரணம் அது நோயின் காரணமாக வெளியாகியதாக கணக்கிடப்படும்.

இன்ப உணர்வோடு இந்திரியம் வெளியானால் குளித்துக்கொள்ளுங்கள் என அலி (ரலி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபூதாவூத்)

ஒருவருக்கு இந்திரியம் வெளியானது போன்ற உணர்வு ஏற்பட்டு இந்திரியத்தை அவர் தன்னுடைய ஆடையிலோ அல்லது உடம்பிலோ பார்க்கவில்லையென்றால் அவர்மீதும் குளிப்பு கடமையில்லை. காரணம் அவருக்கு ஏற்பட்டது ஒரு உணர்வுதானே தவிர அது இந்திரியமல்ல.

தூக்கத்திலிருந்து விழித்தெழுந்த பின் தன் ஆடையில் அல்லது உடம்பில் இந்திரியம் வெளிப்பட்டிருப்பதை ஒருவர் கண்டால் அவர் குளிப்பது கடமையாகும். அவருக்கு இந்திரியம் வெளியான உணர்வு இல்லையென்றாலும் சரியே. காரணம் அவர் தூக்கத்திலிருக்கும் போது அது ஏற்பட்டிருக்கின்றது. ஆடையில் இந்திரியம் இருப்பதை ஒருவர் கண்டு அது எப்போது வெளியானது என்பதை அவர் தெரியவில்லையென்றால் கடைசியாக தூங்கிய தூக்கத்திலிருந்து இந்திரியம் வெளியானதாக கணக்கிட்டு அதற்குப் பிறகு, தொழுத தொழுகைகளை குளித்தபின் மீட்டித்(திரும்ப) தொழ வேண்டும்.

### 2. உடலுறவு கொள்ளுதல்.

இங்கே உடலுறவு என்பதின் கருத்து ஆண் பெண் உறுப்புக்களின் கத்னா செய்யப்பட்ட இடங்கள் சந்திப்பதாகும். அப்போது இந்திரியம் வெளியானாலும் சரி, வெளியாகாவிட்டாலும் சரி குளிப்பு கடமையாகி விடும்.

ஒருவர் ஒரு பெண்ணோடு உடலுறவு கொண்டு அதன் காரணமாக இந்திரியம் வெளியானாலும் சரி வெளியாகாவிட்டாலும் சரி குளிப்பு கடமையாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத், முஸ்லிம்)

அபூ மூஸா அல்அஷ்அரி (ரலி) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களிடம் வந்து நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன் ஆனால் அதனைக் கேட்பதற்கு நான் வெட்கப்படுகின்றேன் எனக்கூறினார்கள். வெட்கப்படாமல் கேளுங்கள் நான் உங்களின் தாய்தான் என ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். ஒரு ஆண் (ஒரு பெண்ணோடு) உடலுறவு கொண்டு இந்திரியம் வெளியாகவில்லையென்றால் குளிக்க வேண்டுமா? என கேட்டார்கள். கத்னா செய்யப்பட்ட இடம் கத்னா செய்யப்பட்ட இடத்தை சந்தித்தாலே குளிப்பு கடமையாகிவிடும் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

3. மாதவிடாய் காலம் முடிந்த பின். அதே போல் பிள்ளைப் பேறுக்குப் பின் வரக்கூடிய இரத்தத்திலிருந்து சுத்தமான பின்.

நீங்கள் குளிக்கக் கடமைப்பட்டோராக இருந்தால் குளித்துப் பரிசுத்தமாகிக் கொள்ளுங்கள். (5:6)

மேலும் (நபியே!) மாதவிடாய் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறுவீராகஃ அது ஒரு அசௌகரியமாகும், எனவே மாதவிடாய்க் காலத்தில் பெண்களை விட்டு விலகி இருங்கள், மேலும் அவர்கள் (உதிரப்போக்கிலிருந்து) சுத்தமாகும்வரை அவர்களை அணுகாதீர்கள், அவர்கள் சுத்தமாகி (குளித்து)விட்டால் அல்லாஹ் உங்களை ஏவிய முறைப்படி அவர்களிடம் வாருங்கள் நிச்சயமாக பச்சாதாபப்பட்டு மீளுகிறவர்களை அல்லாஹ் நேசிக்கிறான், தூய்மையாக இருப்பவர்களையும் அவன் நேசிக்கிறான். (2:222)

மாதவிடாய் வரக்கூடிய காலத்தில் தொழுகையை விட்டுவிட்டு மாதவிடாய் காலம் முடிந்ததும் குளித்துக் கொண்டு தொழும்படி நபி (ஸல்) அவர்கள் ஃபாத்திமா பின்த் அபூ ஹுபைஷ் என்னும் ஸஹாபிப் பெண்மணிக்கு ஏவினார்கள். (புகாரி, முஸ்லிம்)

4. மரணித்தவரை குளிப்பாட்டுவது.

5. முஸ்லிம் அல்லாதவர் இஸ்லாத்திற்கு வந்தால்.

6. நேரம் நுழைந்திருக்க வேண்டும். (ஒவ்வொரு தொழுகைக்கும் நேரம் குறிப்பிடபட்டிருக்கின்றது. ஒவ்வொரு தொழுகையையும் அதனுடைய நேரத்தில் தொழ வேண்டும். அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறிகின்றான். (நிச்சயமாக குறிப்பிட்ட நேரங்களில் தொழுகையை நிறைவேற்றுவது முஃமின்களுக்கு விதியாக்கப் பெற்றுள்ளது. (4:103)

7 கட்டாயமாக மறைக்க வேண்டிய இடங்களை மறைத்திருக்க வேண்டும். (தொழும்போது ஆண்கள் தொப்புளிலிருந்து முட்டுக்கால் வரைக்கும் மறைப்பது அவசியமாகும், பெண்கள் முகத்தையும் மணிக்கட்டுவரை கையையும் தவிர மற்ற அனைத்து உடலையும் மறைப்பது அவசியமாகும்.)

8. கிப்லாவை முன்னோக்கி இருக்க வேண்டும். (தொழுபவர் நான் கிப்லாவை முன்னோக்கி இருக்கின்றேன் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். கிப்லா திசை தெரியாத இடங்களுக்கு சென்றிருந்தால் தன்னால் முடிந்த அளவு கிப்லா திசையை முடிவு செய்து தொழ வேண்டும்)

9. நிய்யத்து வைக்க வேண்டும் (அதற்குரிய இடம் உள்ளமாகும்) நிய்யத்து இன்றி எந்த அமலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அமல்களுக்கு கூலி கொடுக்கப்படுவதெல்லாம் எண்ணங்களை வைத்தே என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி) அதாவது ஒவ்வொரு அமலையும் செய்வதற்கு முன் இதை அல்லாஹ்விற்காகவே நான் செய்கின்றேன் என மனதால் முடிவு செய்ய வேண்டும். இதுவே நிய்யத்தாகும். அமல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குரிய முக்கிய நிபந்தனைகளில் இதுவும் ஒன்றாகும். ஆனால் இன்று சிலர் நிய்யத்து என்கிற பேரில், குறிப்பிட்ட தொழுகைக்கு தக்பீர் கட்டுவதற்கு முன், (அல்லாஹ்விற்காக லுஹர் தொழுகையின் நான்கு ரக்அத்துக்களை கிப்லாவை முன்னோக்கியவனாக மஃமூமாக அதவாக தொழுகின்றேன்) என்ற வார்த்தைகளை வாயால் சத்தமாக மொழிகின்றார்கள். இது முற்றிலும் தவறாகும். நிய்யத்து என்றால் உள்ளத்தால் ஒன்றை முடிவு செய்வதற்குப் பெயராகும். உள்ளத்தால் முடிவு செய்யும் ஒன்றை நாவால் மொழிவது நபிவழிக்கு மாற்றமான முறையாகும். மேல்கூறப்பட்ட வார்த்தைகளை குறிப்பிடுவதும் தேவையில்லாத ஒன்றாகும். நாம் தொழும் தொழுகையின் பெயர் மற்றும் அதன் எண்ணிக்கையை மனதில் நினைப்பதுடன் இமாமுடன் இணைந்து அதை அல்லாஹ்விற்காக நிறைவேற்றுகின்றேன் என்பதை மனதில் எண்ணுவதே நிய்யத்தாகும். அதை அதாவாக கிப்லாவை முன்னோக்கி நிறைவேற்றுகின்றேன் என்பவற்றை வாயால் மொழிவதற்கோ அல்லது மனதில் நினைப்பதற்கோ நாம் ஏவப்படவில்லை. இவ்வாறு நிய்யத்து செய்ய வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கற்றுத்தரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

10. உடல், உடை, இடம் அசுத்தத்திலிருந்து சுத்தமாக இருக்க வேண்டும். (நாம் தொழும் இடம் அல்லது நமது உடல் மற்றும் நாம் அணிந்திருக்கும் ஆடை அசுத்தத்திலிருந்து சுத்தமாக இருக்க வேண்டும்)

இன்ஷா அல்லாஹ் தொடரும்...

## இந்த அத்தியாயத்தை அடிக்கடி ஓதுங்கள்!

நீ பள்ளிவாசலை விட்டு வெளியேறும் முன் குர்ஆனில் மிகச்சிறந்த அத்தியாயத்தை உமக்கு நான் கற்றுக் தரலாம் அல்லவா? என்று கூறி என் கையை பிடித்தார்கள் நபி(ஸல்) அவர்கள். (சிறிது நேரம் கழித்து) நான் கிளம்ப எண்ணிய போது "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! குர்ஆனில் மிகச்சிறந்த சூராவை உமக்கு கற்றுத் தருகிறேன் என்று கூறினீர்களே" என்று நினைவூட்டினேன். "(அது) அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்பது தான். இது ஏழு அம்சங்களையுடையதாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்". (புகாரி, அபூதாவூத், நஸயீ : அபூஸைத்ராபிஉ இப்னு அல்முகல்லீ(ரலி))

குல்ஹுவல்லாஹு அஹது என்ற அத்தியாயத்தை பற்றி கூறும் போது "இது குர்ஆனின் மூன்றில் ஒரு பங்குக்குச் சமமாகும்" என்று நபி(ஸல்) கூறினார்கள். (முஸ்லிம் : அபூஹுரைரா(ரலி))

குல்அஊது பிரப்பில்ஃபலக், குல்அஊது பிரப்பின்னாஸ் ஆகிய இரண்டு சூராக்கள் இறங்கும் வரை நபி(ஸல்) அவர்கள் ஜின்களை விட்டும், மனிதனின் கண்திருஷ்டியை விட்டும் பாதுகாப்புத் தேடுபவர்களாக இருந்தனர். அந்த இரண்டு சூராக்களும் இறங்கியதும் அவ்விரண்டையும் விட்டு விட்டார்கள். (திர்மிதி, இப்னுமாஜா : அபூ ஸைத் அல்குத்ரீ(ரலி)).

சூரா பகராவின் கடைசி இரண்டு வசனங்களை ஒருவர் இரவில் ஓதினால் அவையிரண்டும் (இரவில்) அவருக்கு போதுமானதாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) அறிவிக்கின்றார்கள். (புகாரி, முஸ்லிம்)

# இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் (பாகம் - 10)

*- டாக்டர் ஷேக் சையது M.D.*

கடந்த தொடரில் கரு ஆணாக அல்லது பெண்ணாக இருப்பதற்கு ஒரு பெண் காரணமாக இருப்பதில்லை என்பதைப் பார்த்தோம் இந்தத் தொடரில் அதற்குக் காரணம் ஆண்தான் என்பதைத் தெரிந்து கொள்வோம்.

கருவில் வளரும் குழந்தையின் பாலினத்தைத் தீர்மானிப்பது ஆண்தான் என்பதை அறிவியல் ரீதியாக தெரிந்து கொள்வதற்கு முன் சில அடிப்படைத் தகவலை நாம் தெரிந்தாக வேண்டும்.

### பரம்பரையின் இரகசியம் அடங்கிய செல்.

உயிரினங்கள் அனைத்தும் செல் எனப்படும் நுண்ணிய பகுதியால் ஆக்கப்பட்டுள்ளதாகும். மரம், செடி, கொடி, தாவரங்கள் அனைத்தும் செல்லின் தொகுப்பே. சுருக்கமாகச் சொல்வதானால் உயிரினத்தின் துவக்கமே செல்தான். கருவின் நிலையும் இந்த செல்களின் தொகுப்பு என்பதால், செல்லின் செயல்பாடுகள் பற்றியும், அதன் அங்கங்கள் பற்றியும் சற்று தெரிந்து கொள்வது, கருவறையில் சங்கமமாகும் விந்தணு, சினை முட்டை பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு துணை புரியும். மேலும், அங்கு உருவாகும் கருவின் பாலை (Sex) விந்தணு எவ்வாறு தீர்மானிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கும் உறுதுணையாக அமையும்.

ஒரு செல்லின் சராசரி எடை, ஒரு கிராமின் நூறு கோடியில் ஒரு பகுதியாகும் என்றால், செல் எந்தளவிற்கு நுண்ணியது என்பதை புரிந்து கொள்ளுங்கள். இதில் சில நிமிடங்கள் மட்டும் உயிர் வாழக் கூடியது, இரண்டு மாதங்கள், பல வருடங்கள், அதற்கும் மேலாக உயிர்வாழக் கூடியது என பல வகையான செல்கள் உண்டு. நாம் மனிதக் கருவியல் பற்றி புரிந்து கொள்ளும் முயற்சியில் உள்ளதால் மனித செல்கள் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொள்வோம்.

ஒரு மனிதனின் உடல் கோடிக்கணக்கான செல்களின் தொகுப்பாகும். மனித உடலில் இடைவிடாது செல் பெருக்கம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு வினாடிக்கு 12.5 கோடி எனும் விகிதத்தில் செல்கள் புதுபிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஒரு நிமிடத்திற்கு 750 கோடி செல்கள் பெருக்கம் நடை பெறுகிறது. அதன் படி ஒரு மணிநேரத்தில் எத்தனை கோடி செல்கள், ஒரு நாளைக்கு எத்தனை கோடி செல்கள் புதுபிக்கப்படும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். பழைய செல் செயலிழந்து இறந்து விடும் போது, புதிய புதிய செல்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். நாம் அறியாமலேயே இந்நிகழ்ச்சி நமது உடலில் இடை விடாது தொடர்ந்து நடை பெற்று வருகின்றன. இந்த மனித செல்களில் மிகச் சிறியது ஆண் உயிரணுவாகவும், மிகப் பெரியது பெண் கருமுட்டையாகவும் இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

### செல் அங்கங்கள்.

முக்கியமாக செல்சுவர், அதனை அடுத்து திரவ வடிவத்திலான சைட்டோபிளாசம், அதில் மிதக்கும் மைட்டோ காண்ட்ரியா, அதன் மையப்பகுதியில் உட்கருவாகத் திகழும் நியூக்ளியஸ் ஆகிய முக்கிய பகுதிகளை அங்கங்களாகக் கொண்டுள்ளதாகும் ஒரு செல். மைட்டோ காண்ட்ரியாவின் பணிகளில் ஒன்று, செல் சுவாசிப்பதற்கு துணை புரிவதாகும்.

இதயம் போன்று விளங்கும் உட்கருவான நியூக்ளியஸ் ஒரு செல்லின் மிக மிக முக்கிய பகுதியாகும். இந்த உட்கரு இன்றி ஒரு செல் தனது பயணத்தை தொடர முடியாது. இந்த நியூக்ளியஸித்திற்குள் மிக சிறிய துணுக்குகளாக புரோட்டின்கள் உள்ளன. இதனை குரோமோசம் என்று கூறப்படும். ஒவ்வொரு செல்லினுள் 46 குரோமோசம்கள் உள்ளன. இந்த குரோமோசோமத்திற்குள் தான் மனித வம்ச பரம்பரைச் செய்திகளை உள்ளடக்கிய வளை போன்ற நுண்ணிய துணுக்குகளான நியூக்ளிக் அமிலங்கள் என்று ஒன்று உண்டு. அதனைச் சுருக்கமாக டி. என். ஏ. (D.N.A.) (டி ஆக்ஸிரிபோ நியூக்ளிக் ஆசிட்) என்று கூறப்படும். இது முதன் முதலில் 1953ம் ஆண்டுதான் பிரட்னில் காவண்டிஷ் ஆய்வுக் கூடத்தில் வாட்ஸன் (Watson), க்ரிக் (Crick) ஆகிய இரு உயிரியல் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பிறகு இந்த டி.என்.ஏ ஆய்வில் மேலும் பல அறிஞர்கள் ஈடுபட்ட போது வியக்கத் தக்க பல கோடி அரிய செய்திகள் அதில் பதிவு செய்யப்பட்டிருப்பதை அறிந்து கொள்ள முடிந்தது. வம்ச பரம்பரைச் செய்திகள், பின் வரும் வாரிசுகள் பற்றிய செய்திகள், ஒரு மனிதனை வேறுபடுத்தி அடையாளப்படுத்தும் செய்திகள் என வேறுபட்ட பல செய்திகள் அதில் பதிவு செய்யப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு வெவ்வேறு செய்திகளை குறிப்பிட நியூக்ளிக் அமிலங்கள் கொண்ட பல தொகுப்புகள் இந்த டி.என்.ஏ.வில் உள்ளது. இந்தத் தொகுப்புகளைத்தான் ஜீன் (g e n e) என்று குறிப்பிடுகின்றனர். கண், காது, மூக்கு, கை, கால், உடலமைப்பு உறுப்புகள் எவ்வாறு எந்த இடத்தில், எந்தெந்த நிறத்தில் இருக்க வேண்டும் என்பதையும் தீர்மானிப்பது இந்த ஜீன்தான். முன்னோரின் தோற்றம் வாரிசுகளுக்கு ஏற்படுவதற்கும் இந்த டி.என்.ஏ.வில் உள்ள ஜீன்தான் காரணம். கருவில் வளரும் குழந்தை பிறந்து, இறக்கும் வரை அதன் இயக்கம் எவ்வாறு இருக்க வேண்டும், அதன் இரத்த அழுத்தம், பார்க்கும், கேட்கும், விளங்கும் திறன் அனைத்தையும் தீர்மானிப்பதும் இந்த ஜீன்கள்தான். ஒவ்வொரு வயதிலும் எவ்வாறு உடலமைப்பு இருக்கும் என்பதையும் இந்த டி.என்.ஏ.வில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கும்.

இந்த ஜீன்களின் தீர்மானத்தில் சிறு சறுக்கல் ஏற்பட்டு விட்டால் கூட, கண் இருக்க வேண்டிய இடத்தில் காதும், மூக்கு இருக்க வேண்டிய இடத்தில் வாயும் என மாறிவிடும். மேலும், பல்வேறு பிறவி நோய்கள், பிறவி ஊனங்கள் ஏற்படுவதற்கும், புற்று நோய் தோன்றுவதற்கும் காரணமாகவும் அது அமைகிறது.

இதில் வியப்பு என்னவெனில், டி.என்.ஏ. வில் பதிவு செய்யப்பட்டுள்ள செய்திகளில் 3 விழுக்காடுதான் இது வரை அறியப்பட்டுள்ளன மீதமுள்ள 97 விழுக்காடு செய்திகள் இதுவரையும் அறியப்பட வில்லை என்று விஞ்ஞான உலகம் கையை விரிக்கிறது. அவ்வளவு செய்திகளை அதனுள் பதிவு செய்து வைத்தவன் யார்? திகைப்பூட்டும் இந்த ஆய்வு, இறுதியில் இறை நம்பிக்கையில் போய் முடிகிறது. அறிய முடியாத அந்த 97 விழுக்காடு செய்திகள் அதனைப்பதிந்து வைத்த இறைவனுக்கே வெளிச்சம். இது பற்றி எழுத வேண்டிய செய்திகள் ஏராளம். இது அதற்குரிய இடம் இல்லை. எனவே, நமது நோக்கத்திற்கு வருவோம்.

### செல் பெருக்கம்.

செல் பெருக்கம் மனித உடலில் இடையுறாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று பார்த்தோம். உடலியல் செல், இனவிருத்தி செல் என இருவகை செல்கள் உள்ளன. இந்த இரண்டின் பெருக்கமும் இரு வேறு முறையில் நடைபெறுகிறது.

ஒரு உடலியல் செல் குறிப்பிட்ட வளர்ச்சியை அடைந்ததும் தன்னைத் தானே இரட்டிப்பாக ஆக்கிக் கொள்கிறது. அப்போது, அதன் உட்கருவான நியூக்ளியஸ் குறுக்கு வாக்கில் இரண்டாக பிரிந்து, அதனுள் இருக்கும் 46 குரோமோசோம்கள் 23, 23 என பிரிந்து எதிரெதிராக ஒதுங்கிவிடுகிறது. அப்போது குரோமோசோம்களில் உள்ள டி.என்.ஏ. வானது நீளவாக்கில் பிளந்து கொள்ளும். அதனால் ஏற்கனவே இரண்டாகப் பிரிந்து, ஒதுங்கியிருந்த ஒவ்வொரு 23 குரோமோசோம்களும் நீளவாக்கில் பிளந்து கொள்கின்றன. நீளவாக்கில் பிரிந்த குரொமோசோம்கள், ஆர்.என்.ஏ. (ரிபோ நியூக்ளிக் ஆசிட்)வின் துணையுடன் எதிர் எதிராக உள்ளதுடன் இணைந்து, இரண்டு தனிச்செல்களாக ஆகிவிடுகிறது. அப்போது ஒவ்வொரு செல்லும் 46 குரோமோசோம்களைக் கொண்டிருக்கும். தாய் செல்லில் இருந்த அனைத்து தகவலும், பிரிந்த செல்கள் இரண்டிலும் ஆர்.என்.ஏ. வின் மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கும். இவ்வகையான செல் பெருக்கத்தினை மைடாஸிஸ் (Mitosis) என்று கூறப்படும். அதாவது மிகுதல் பிரிகை ஆகும்.

### இனவிருத்தி செல் பெருக்கம்.

இனவிருத்தி செல் பெருக்கம் இதற்கு சற்று மாறு பட்ட முறையில் நடைபெறும். இனவிருத்தி உறுப்புகளில் உருவாகும் ஆணுயிர் செல்லானது 23 ஜோடி குரோமோசோம்களையும், பெண் கருமுட்டை செல்லானதும் 23 ஜோடி குரோமோசம்களையும் கொண்டிருக்கும். இந்த ஒவ்வொன்றிலும் முள்ள 23 ஜோடி குரோமோசோம்களில் 22 ஜோடியானது வம்சப் பரம்பரைச் செய்திகளை உள்ளடக்கியுள்ளன. இதனை உடற்கூறு குரோமோசோம்கள் (Autosomes) என்று கூறப்படும். இந்த வகைக் குரோமோசோம்கள் தான் பிறக்கப் போகும் சிசுவின் உடல் கூறு இயல்புகளையும், அதன் இயக்கங்களையும், அதன் இயல்புகளையும் தீர்மானிக்கும்.

23 வது ஜோடியானது பாலினத்தை (Sex) தீர்மானிக்கும் செய்தியினை உள்ளடக்கி இருக்கும். இதனை பாலினக் குரோமோசம் (Sex Chromosomes) என்று குறிப்பிடுகின்றர். இதில் ஆண் உயிரணுவில் உள்ள 23வது ஜோடியான இனக் குரோமோசம் X, Y என்றும், பெண் கருமுட்டையில் X, X என்றும் இருக்கும். Y என்பது ஆண் பாலைத் தீர்மானிக்கும், X பெண் பாலைத் தீர்மானிக்கும் குரோமோசம் ஆகும்.

இந்த 23 ஜோடி குரோமோசம்கள் முதிர்ச்சி அடையும் போது, இரண்டாக பிரிந்துவிடுகிறது. விந்தணுச் செல் இரண்டாகப் பிரியும் போது, 22 உடற்கூறு குரோமோசம்கள் (ஆட்டோசோம்), ஒரு X எனும் பெண் இனக் குரோமோசம் என்ற ஒரு பாதியாகவும், 22 உடற்கூறு குரோமோசம்கள் (ஆட்டோசம்), ஒரு Y எனும் ஆண் இனக் குரோமோசம் என்ற இன்னொரு பாதியாகவும் பிரிந்து விடும்.

சினை முட்டை செல்லிலும் இதே போன்றுதான் இரு பாதிகளாகப்பிரிந்து நிற்கும். ஆனால், இங்கு இரு பாதியிலும் X எனும் பெண் இனக் குரோமோசம்தான் இருக்கும். இதனை மையாஸிஸ் (Meosis) குன்றுதல் பிரிகை என்று கூறப்படும்.

விந்தணுச் செல், சினை முட்டையை அடையும் போது இரண்டிலும் உள்ள பிரிந்த 23, 23 செல்கள் ஒன்றிணையும். அப்போது ஒரு செல்லுக்குத் தேவையான 46 குரோமோசம்களைக் கொண்ட ஒரு செல்லாக வடிவம் பெறுகிறது. இவ்வாறு ஒன்றிணையும் போது விந்தணுச் (ஆணுயிர்) செல்லின் இனக் குரோமோசோம் X ஆக இருந்தால் அப்போது உருவாகும் சிசு பெண்ணாகவும், விந்தணுச் செல்லின் இனக் குரோமோசோம் Y ஆக இருந்தால் அப்போது உருவாகும் சிசு ஆணாகவும் இருக்கும் என இன்றைய மருத்துவ விஞ்ஞானம் கூறிக் கொண்டிருக்கிறது. சினை முட்டை செல்லின் பாலினக் குரோமோசம் எல்லா நிலையிலும் ஒன்றுபோலவே இருக்கும். பாலினத்தை (Sex) தீர்மானிப்பதில் இதற்கு எந்த பங்களிப்பும் இல்லை என்பதை தெளிவு படுத்துகிறது.

இந்த இடத்தில் இன்னொரு உண்மையையும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, விந்தணுவும், சினை முட்டையும் ஒன்றிணையும் போதே அந்தக் கருவின் பாலினம் என்னவாக இருக்கும் என்பது தீர்மானிக்கபட்டுவிடுகிறது. ஆனால் அதனை உணர்ந்து கொள்ளும் திறனோ, அதனை கண்டு பிடிக்கும் அறிவியல் ஆற்றலோ மனிதனிடம் இல்லை. அது இறைவன் மட்டுமே அறிந்த இரகசியமாக உள்ளது. இந்த இடத்தில், கருவறையில் உள்ளதை அறிந்தவன் அல்லாஹ் மட்டுமே! என்ற இறை வசனம் விஞ்ஞானத்தை மிகைத்து நிற்பதை உங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

### செல் தியரி.

செல் எனும் வார்த்தைப் பிரயோகமே 1665 ஆண்டிற்குப் பிறகுதான் நடைமுறையில் வந்தது. லியோன் ஹுக் என்பவரால் 1591ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட நுண்ணோக்கியின் (மைக்ரோஸ்கோப்) மூலம் உயிரியல் ஆய்வில் ஈடுபட்ட ரோபெர்ட் ஹுக் என்பர், தேன் கூட்டில் உள்ள சிறிய அறைகள் போல உயிரினங்களின் உடலில் நுண்ணிய தடுப்புச் சுவர்கள் கொண்ட சிறிய சிறிய

அறைகள் நிறைய இருப்பதைக் கண்டுபிடித்தார். இவற்றைக் குறிப்பிடுவதற்கு அறை என்ற அர்த்தம் உள்ள செல் என்ற வார்த்தையை பிரயோகம் செய்தார். அன்று முதல் இது அறிவியல் வழக்குச் சொல்லாக நடைமுறைக்கு வந்தது. அவருக்கு பின் வந்த உயிரியல் அறிஞர்கள் பலரும், இந்த செல் ஆய்வினை தொடர்ந்து மேற்கொண்ட போது, மனிதன், விலங்கு மட்டுமல்லாமல், செடி, கொடி தாவரங்கள் அனைத்திலும் இந்த செல் இருக்கும் உண்மையைக் கண்டுபிடித்தார்கள். இதனை முதலில் 1839 ஆண்டு ஸ்வான் என்ற விஞ்ஞானிதான் கண்டுபிடித்தார். 1938ம் ஆண்டு ஸ்லீடன் என்ற விஞ்ஞானி தனது தாவரவியல் ஆய்வின் மூலம் ஸ்வானின் கண்டுபிடிப்பை உறுதிப்படுத்தினார்.

ஆரம்ப காலகட்டங்களில் இந்த செல் பற்றிய ஆய்வு, செல் சுவர் அளவிலேதான் இருந்து வந்தது. செல் சுவரைத் தாண்டி ஆய்வு செய்வதற்குப் போதுமான உபகரணங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. 19ம் நூற்றாண்டின் துவக்கத்தில் மின்னணு நுண்நோக்கி (Electron Microscope) கண்டு பிடிக்கப்பட்டப் பின்பு அதன் துணையால் 1831ஆம் ஆண்டு ராபர்ட் ப்ரவ்ன் என்ற விஞ்ஞானி செல்லின் மையப்பகுதியல் உருண்டை வடிவிலான ஒரு பொருள் இருப்பதைக் கண்டுபிடித்து, அதற்கு நியூக்ளியஸ் (Nucleus) எனவும் பெயரிட்டார். அதனைத் தொடர்ந்து, உயிரினச் செல் சுவரை அடுத்து ஒரு வகையான கெட்டிப் பொருள் இருப்பது 1846ம் ஆண்டு வான்மோல் என்ற விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனைக் கண்டுபிடித்த ஆரம்பக் காலகட்டங்களில், அது பல பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டது. பின்னாளில் அதற்கு புரோட்டோபிளாசம் என்ற பெயர் நிலை பெற்றது. மேலும் பல ஆய்வுகளை உயிரியல் விஞ்ஞானிகள் மேற் கொண்ட போது, திரவப் பொருள் இருப்தையும் அறிய முடிந்தது. அதற்கு சைட்டோப்பிளாசம் எனவும் பெயர் சூட்டப்பட்டது. 1890ம் ஆண்டுவாக்கில் இந்த சைட்டோப் பிளாசத்திற்குள் நுண்ணிய திடப்பொருள் மிதந்து கொண்டிருப்பதை அல்ட்மான் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார். அதனை இன்று மைட்டோ காண்ட்ரிய (Mitochondtia) என்று நாம் அறிந்து வருகிறோம். அதே ஆண்டில்தான் வால்டேயேர் எனும் விஞ்ஞானி உட்கருவினுள் (Nucleus) குரோமோசம்கள் இருப்பதைக் கண்டுபிடித்தார்.

விஞ்ஞானிகளின் ஆய்வுப் பயணம் தொய்வின்றி தொடர்ந்து கொண்டிருந்ததன் பயனால், 1953ம் ஆண்டு வாட்சன், க்ரிக் என்ற இரு உயிரியல் விஞ்ஞானிகளும் சேர்ந்து, குரோமோசம்களுக்குள் மரபணுக் கூறான டி.என்.ஏ. (D.N.A) இருப்பதைக் கண்டுபிடித்தனர். இந்த கண்டு பிடிப்பு உயிரியல் ஆய்வில் மிகப் பெரிய மறுமலர்ச்சி ஏற்படக் காரணமாக இருந்தது. மேலும் அது திகிலூட்டும் திருப்புமுனையாகவும் அமைந்திருந்தது. மனிதப் பரம்பரைச் செய்திகள் அனைத்தும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் பல் வேறு தகவல்கள் அதில் பதிவு செய்யப்பட்டிருப்பதும் அறியமுடிந்தது. மேலும் ஆய்வினை மேற் கொண்ட போது முடிவில்லாத சங்கிலித் தொடராக அதன் செய்தி தொடர் அமைந்துள்ளதும் கண்டு பிடிக்கப்பட்டது. மரபணுக்கூறான டி.என்.ஏ. (D.N.A) வில் பதிவு செய்யப்பட்டிருக்கும் செய்திகளில் 3 விழுக்காடு தகவல்கள்தான் இது வரை அறியப்பட்டுள்ளன. அந்த தகவல்கள் மட்டும் பல இலட்சம் பக்கங்களை நிரப்பும் அளவிற்கு இருக்கின்றன என்றால், அறியப்படாத 97 விழுக்காடு தகவல்கள் எத்தனை கோடிப் பக்கங்களை நிரப்பக் கூடியதாக இருக்கும் என்பது மேதைகளுக்கே தலை சுற்றாக விளங்குகிறது. எனவேதான், 1958ம் ஆண்டு கோட்டர்ட் என்பர் செல்லடக்கச் செய்திகள் அனைத்தையும் நாம் சரியான முறையில் புரிந்து கொண்டால், உயிரினத்தின் உண்மை வடிவத்தைப் புரிந்து கொள்வோம் என்று அறிவிப்புச் செய்தார். அதன் பொருள்: இது வரையும் செல் பற்றிய செய்திகளையும், அதில் சார்ந்திருக்கும் மரபணுக் கூறான டி.என்.ஏ. பற்றியும் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை என்பதை அவர் பறை சாற்றுகிறார்.

செல் ஆய்வின் பின்னணியை புரிந்து கொண்ட நாம், 1665ம் ஆண்டுக்கு அதாவது 338 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்கள் செல் பற்றியும், அதில் அடங்கியுள்ள குரோமோசம்கள் பற்றியும் துளி கூட அறிந்திருக்க வாய்ப்பில்லை என்பது மட்டுமல்ல, இதன் பெயர்களைக் கூட அவர்கள் கேட்டிருக்க மாட்டார்கள் எனும் போது 1423 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மனிதர் இந்த செய்திகளை யெல்லாம் அறிந்திருந்தார் என்று சொன்னால் அதனை ஏற்க முடியுமா? நிச்சயமாக யாரும் இதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

கருச்சிசுவின் பாலினத்தை தீர்மானிப்பது விந்தணுதான் என்ற இந்த அறிவியல் உண்மையும் 1953 ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது டி.என்.ஏ. (D.N.A) என்ற துணுக்கினை கண்டறிந்தப் பிறகுதான் இது சாத்தியமாயிற்று. அதற்கு முன்பு வரை இந்த செய்தியினையும் யாரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

ஆனாலும் 1423 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்தவரான முஹம்மது (ஸல்) அவர்களின் மூலம் போதிக்கப்பட்ட இறைவேதமான குர்ஆனில் இந்தச் செய்தி தெளிவாகவே சொல்லப் பட்டிருக்கிறது. இந்தச் செய்தியை அவரால் சாதாரண மனிதர் என்ற அடிப்படையில் சொல்லியிருக்க முடியுமா? என்றால் நிச்சயம் முடியாது. இந்த டி.என்.ஏ. வையும், அது சார்ந்திருக்கும் குரோமோசோம்களையும் யார் படைத்தானோ, அவனால் மட்டுமே எல்லாக் காலத்திலும் சொல்ல முடியும்.

சிசுவின் பாலினத்தை தீர்மானிப்பது எது? என்ற இந்தச் செய்தி குர்ஆனில் இடம் பெற்றிருப்பது, முஸ்லிம்களின் வேத நூலான குர்ஆன், இறைவானல் இறக்கியருளப்பட்டதுதான் முஹம்மது நபி (ஸல்) அவர்களால் புனைந்து சொல்லப்பட்டதல்ல என்பதனை இன்றளவும் பறைச்சாற்றிக் கொண்டும் இருக்கிறது. இந்த செய்தி திருமறையில் ஒரு இடத்தில் அல்ல, பல இடங்களில் சொல்லப்பட்டிக்கிறது. எந்தெந்த வசனத்தில், எவ்வாறு இந்தக் கருத்து சொல்லப் பட்டுள்ளது என்பதை அடுத்த தொடரில் இன்ஷா அல்லாஹ் பார்ப்போம்.

**இன்ஷா அல்லாஹ் தொடரும்...**

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 5:10

## போட்டிக்குரிய கேள்விகள்

**1. மறுமையில் அல்லாஹ் பேசாத மூவரில் ஒருவர் யார்?**

a. தொழாதவர்

b. ஷிர்க் செய்தவர்

c. கரண்டைக்கு கீழ் ஆடை அணிந்தவர்

**2. ஈமானின் அடிப்படைகளில் மூன்றாவது**

a. மறுமையை நம்புவது

b. தூதரை நம்புவது

c. வேதத்தை நம்புவது

**3. மஹ்ஷரில் கேட்கப்படும் ஐந்து விஷயங்களில் ஒன்று.**

a. வாழ்க்கை பற்றி

b. குடும்பம் பற்றி

c. குர்ஆன் பற்றி

**4. ஐந்துக்கு முன் ஐந்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்னும் ஹதீதில் ஒன்று.**

a. ஓய்வு நேரம் b. மறுமை

c. பொறுமை

**5. அர்ஷின் நிழலில் அமரும் ஏழு கூட்டத்தாரில் ஏழாவது கூட்டத்தினர் யார்?**

a. தனிமையிலிருந்து அல்லாஹ்வை நினைத்து அழுதவர்

b. வணக்கவழிபாட்டில் உருவான வாலிபர்

c. பள்ளியோடு உள்ளம் சம்பந்தப்பட்டவர்

**அறிவுப் போட்டி - 5:9 க்கான பரிசு பெறுபவர் : ஃபர்ஸானா ரமீஸ் 0567851086**

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

## விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக Abdullah,AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## அறிவுப் போட்டி - 5:9 க்கான விடைகள்

1. c. கிப்லா திசையை முன்னோக்கி துஆ செய்ய வேண்டும்.
2. b. முதல் 3 சுற்றுகளுக்கு மட்டும்
3. a. சாதரணமாக அணியும் ஆடை
4. a. ருக்னுல் யமானியிலிருந்து
5. a. சூரா காபிரூன் மற்றும் சூரா இக்லாஸ்

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 26 - *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் 'லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்" என்று ஒரு நாளில் 100 தடவை கூறுகிறாரோ அவருக்கு பத்து அடிமைகளை உரிமை விட்ட நன்மை கிடைக்கும். மேலும் அவருக்கு 100 நன்மைகள் எழுதப்படும், 100 பாவங்கள் மன்னிக்கப்படும். அன்று மாலை வரை ஷைத்தானை விட்டு அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படும். இதைவிட அதிகம் செய்தவரை விட வேறு யாரும் இவரை விட சிறந்த அமலை செய்யமுடியாது.

**பொருள்:** வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹுதஆலாவைத் தவிர வேறுயாரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை. ஆட்சி அவனுக்கே உரியது. அனைத்துப்புகழும் அவனுக்கே உரியது, அவனே அனைத்துப் பொருள்கள் மீது ஆற்றல் படைத்தவன்,

யார் "ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி" என்று ஒரு நாளில் 100 முறை கூறுவாரோ, கடல் நுரையளவு அவரின் பிழைகள் இருந்தாலும் அது மன்னிக்கப்படும். என மேலும் நபி (ஸல்) கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

**பொருள்:** "அல்லாஹ்வைப் புகழ்வதுடன் அவனைத் தூய்மையானவன் எனப் போற்றுகிறேன்"